2014.04.11

**உள்ளக சுற்றறிக்கை இலக்கம் 2014/01**

மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி - வலய இலக்கம் - 01
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி - வலய இலக்கம் - 02
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி - வலய இலக்கம் - 03
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி - வலய இலக்கம் - 04
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி - வலய இலக்கம் - 05
மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி - வலய இலக்கம் - 06

**2013ம் ஆண்டில் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள சட்டத்தின் கீழ் இத்திணைக்களத்தில் இணைகின்ற உத்தியோகத்தர்களுக்கான விருப்பத்தினை தெரிவிக்கும் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டதன் அடிப்படையில் இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஊழியர்களுக்கு 2013ம் ஆண்டின் 01 இலக்கத்தினையுடைய பாராளுமன்ற சட்டத்தின் மூலமும் 2014/04/03ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தின் 14/0430/519/006 என்ற இலக்கத்தினையுடைய தீர்மானத்திற் கமையவும் கீழ் குறிப்பிடப்படும் பிரேரணைகளிலிருந்து தனது விருப்பத்தின் பிரகாரம் தெரிவு செய்யப் படும் பிரேரணைகளுக்கமைய வாழ்வின் எழுச்சி திணைக்களத்தில் இணைந்துக் கொள்ள மற்றும் அதிலிருந்து விலகிக்கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றது. இவை தொடர்பில் தங்களது வலயத்திற்குச் சொந்தமான மாவட்டங்களில் கடமைபுரியும் சகல உத்தியோ கத்தர்களையும் விளக்கமளிக்குமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

***01. சுயவிருப்பத்தின் பிரகாரம் கடமையிலிருந்து விலகுதல்***

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் கடமையில் சேர்ந்துகொள்ள விருப் பமில்லாத சுயவிருப்பத்தின் பிரகாரம் கடமையிலிருந்து விலகிச்செல்ல விரும்பும் சந்தர்ப்பத்தில் அமைச்சரால் தீர்மாணிக்கப்படவேண்டிய சுயவிருப்பத்தின் பிரகாரம் கடமையிலிருந்து விலகிச்செல்லும் நட்டஈட்டுத்திட்டத்தின் தீர்மானங்களுக்கமைய ஏதேனும் ஒரு நட்டஈட்டுத் தொகையினை அவ்வுத்தியோகத்தருக்கு அல்லது ஊழிய ருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

2014.04.03ம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் 14/0430/519/006 என்ற இலக்கத்தினையுடைய தீர்மானங்களுக்கமைய உள்ளடங்கிய சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் உரிமைகள் வழங்கப்படுகின்ற விதம் கீழுள்ளவாறாகும்.

❖ வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டதன் அடிப்படையில் ஓய்வு பெற உத்தேசித்துள்ள இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின், இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் மற்றும் இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கான சுயவிருப்பத்தின் பிரகாரம் ஓய்வுபெறும் திட்டங்கள்.

1. <u>இந்த சுயவிருப்பத்தின் பிரகாரம் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கு தகுதிபெறுவோர்</u>

1.1 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்படுகின்ற தினத்திற்கு முன்னைய தினம் அல்லது அதற்கு முன்னர் 55 வயதினைப் பூர்த்தி செய்யாத தும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின், இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையின் மற்றும் இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களும்

1.2 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்படுகின்ற தினத்திற்கு முன்னைய தினம் அல்லது அதற்கு முன்னர் 55 வயதினை எய்தியுள்ள பூர்த்தி செய்த நிரந்தர ஊழியர்கள்

1.3 இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின், இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் அமைய/ஒப்பந்த/சமயாசமய ஊழியர்கள்

2. <u>மேலே 1.1இன் கீழ் கணக்கிடப்படும் ஊழியர்களின் பொருட்டு செலுத்தப்படுகின்ற நட்டஈடு</u>

(அ) முன்னைய சேவை : ஒவ்வொரு 12 மாத சேவைக்காலத்திற்கு இருமாத(02) சம்பளம்

(ஆ) இழக்கப்படும் சேவை : ஒவ்வொரு 12 மாத சேவைக்காலத்திற்கு ஒருமாத(01) சம்பளம்

(இ) உயர்ந்த பட்ச நட்டஈடு ரூபா 1,000,000/- ஆகும்.

3. <u>மேலே இலக்கம் 1.2இன் கீழ் கணக்கிடப்படும் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் நட்டஈடு</u>

இந்த வகையின் கீழ் கணக்கிடப்படும் ஊழியர்கள் மேலே 02(இ) வகையில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்ந்தபட்சத்திற்கு உட்பட்டதாக 60 வருட வயது வரை ஒவ்வொரு 12 மாதத்திற்கும் ஒரு மாத(01) சம்பளம் என்ற அடிப்படையில் இழக்கப் படுகின்ற சேவைக்காலத்திற்கு மாத்திரம் நட்டஈட்டினைப் பெற தகுதிபெறுகின்றனர்.

4. <u>மேலே இலக்கம் 1.3 வகையின் கீழ் கணக்கிடப்படுகின்ற அமைய/ ஒப்பந்த/ சமயா சமய ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற நட்டஈடு</u>

I. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்படுகின்ற தினத்தில் நிரந்தர ஊழியர் தொகையில் உள்ளீர்க்கப்படாத மேலே குறிப்பிடப்படுகின்ற மூன்று அதிகாரசபைகளிலும் 180 நாட்கள் கடமையினைப் பூர்த்தி செய்து கடமையில் ஈடுபட்டுள்ளோர்.

(அ) முன்னைய சேவையில் ஒவ்வொரு பன்னிரண்டு மாதத்திற்கும்(12) இரு மாத(02) சம்பளம்

(ஆ) உயர்ந்தபட்ச நட்டஈடானது பன்னிரண்டு மாத(12) சம்பளம்

(இ) நட்டஈடு கணக்கிடப்படும் முறை
(22 x நாளாந்த சம்பளம் x மாதங்களின் எண்ணிக்கை)

5. <u>மேலே இலக்கம் 1.1 மற்றும் 1.2 வகையின் கீழ் கணக்கிடுவதற்குரிய நிபந்தனைகள்</u>

(அ) நட்டஈடு செலுத்தும் நடவடிக்கைகளின் பொருட்டான குறித்த கட்டாய ஓய்வு பெறும் வயதானது 60 வருடங்களாக கணிக்கப்படும்.

(ஆ) ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் பெறுகின்ற ஆரம்ப ஒன்றிணைந்த மாதாந்த சம்பளத்தினை அடிப்படையாக கொண்டு நட்டஈடு கணக்கிடப்படுகின்றது. (இடைக்கொடுப்பனவுகள் தவிர்ந்த)

(இ) நட்டஈட்டுக்கு மேலதிகமாக குறித்த சட்டங்களின் சட்டதிட்டங்களுக்கமைய சகல சட்டபூர்வ கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும்.

(ஈ) ஒழுக்காற்று விசாரணைக்குட்பட்டதாக உள்ள அல்லது ஏதேனும் ஒரு நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்புப் பெற வேண்டியுள்ள நிரந்தர ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற தகுதியற்றவர்களாவர்.

(உ) வெளிநாடு சென்று தொழில் அல்லது கற்கை நடவடிக்கைகளின் பொருட்டு பெற்றுக்கொண்ட சம்பளமற்ற விடுமுறை, வைத்திய காரணங்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட விசேட விடுமுறைகள், இரண்டாம் நிலை யடிப்படையில் (Secoudmend) பிற நிறுவனங்களில் அல்லது விருப்பின் அடிப்படையில் பிற அரச நிறுவனங்களின் சேவைக்காலங்கள் நட்டஈட்டுக் கொடுப்பனவு பணியின் பொருட்டு கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(ஊ) செலுத்த வேண்டியுள்ள கடன்தொகை, முற்பணங்கள் மற்றும் அறவிடப்பட வேண் டியுள்ள பிறதொகைகள் நட்டஈட்டுத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.

(எ) இந்த நன்மைகளைப் பெற்றுக்கொண்டு கடமையிலிருந்து ஓய்வுபெறுவோர் எக்கார ணம் கொண்டும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியாயதிக்க சபைகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்கள் உட்பட அரச பிரிவில் கடமையின் பொருட்டு மீண்டும் இணைந்து கொள்வதற்கு உரித்தற்றவர் களாகின்றனர்.

6. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்திற்கு உள்ளீர்க்கப்படுகின்ற சமுர்த்தி ஆணையாளர் திணைக்களத்தினதும் உடரட்ட கிராமிய புனருத்தாபன திணைக்களத் தினதும் திணைக்கள சேவையில் உத்தியோகத்தர்களின் புதிய சேவை நிபந்தனைகள் தமது திணைக்களங்களில் தற்போது நடைமுறையிலுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் பொருத்தமற்ற சந்தர்ப்பங்களில் ஓய்வுபெறும் பொருட்டு அவர்களால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் ஓய்வூதிய அமைப்பு விதியின் 02 மற்றும் 07வது பிரிவுகளுக்கமைய கவனத்திற்கொள்ளப்படும்.

7. மேற்படி ''அதிகாரசபைகள்'' மூன்றிலும் இரண்டாம் நிலை அடிப்படையில் கடமையாற்றும் நாடு தழுவிய சேவைகளினதும் ஒன்றிணைந்த சேவைகளினதும் ஊழியர்கள் அல்லது மேற்கூறிய இரண்டு அரசாங்கத்திணைக்களங்களிலும் கடமையாற்றும் ஊழியர்கள் இந்த சுயவிருப்பத்தின் பிரகாரம் ஓய்வு பெறும் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படமாட்டாது.

   இத்திட்டத்தின் கீழ் கடமையிலிருந்து விலகிச்செல்லும் ஊழியர்களுக்கு தாம் முன்னர் கடமையின் போது பங்களிப்புச்செய்த சட்டபூர்வ கொடுப்பனவுகளின் பொருட்டு உரித்துடையோராவர்.(ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம்,ஓய்வூதியப் பணிக்கொடை)

## *02. <u>ஆரம்ப சேவைக்காலத்துடனான ஓய்வூதியம் பெறும் ஊழியர் ஒருவராகுதல்</u>*

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித்திணைக்களத்தின் சேவையில் இணைந்துகொள் வதற்கு விருப்பத்தினை தெரிவிக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த அதிகாரசபையில் ஏதேனும் ஒரு பதவியில் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து அமுல்படுகின்றவாறு திணைக்களத்தின் சேவையில் இணைந்துகொள்ள அந்த உத்தியோகத்தர் அல்லது ஊழியர் விருப்பத்தி னைத்தெரிவிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவ்வுத்தியோகத்தர் அல்லது ஊழியர் குறித்த

அதிகாரசபையில் அப்பதவியில் நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து அமுலிலுள்ளவாறு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்குட்பட்டதாக திணைக்கள உத்தியோகத்தர் ஒருவராகவோ அல்லது ஊழியர் ஒருவராகவோ கருதப்படுவதுடன் குறித்த அதிகாரசபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்கிய பங்களிப்பினைக் கவனத்திற்கொண்டு ஓய்வூதிய அமைப்பு விதிக்கோவையின் ஒழுங்குகளின் கீழ் ஓய்வூதியத்தின் பொருட்டு அவ்வுத்தியோகத்தர் அல்லது ஊழியர் உரித்துடையோராவர்.

இத்திட்டத்தின் கீழ் சேவையில் இணையும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களின் பொருட்டு ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள முழுப்பங்களிப்பில் 60% மட்டளவு அரசாங்கத்திற்கு உரித்தாகும். ஊழியரின் பங்களிப்பாகவுள்ள 40%த்தினை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியும். இருப்பினும் தனது பங்களிப்பு நிதியத் திலிருந்து ஆரம்ப சேவைக்காலத்திலிருந்து ஓய்வூதியத்துடனான ஊழியர் என்ப தனால் விதவைகள், தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய் வது கட்டாயமாகும் என்பதுடன் அவர்களால் அப்பங்களிப்பினை பெற்றுக் கொள்ளும் தினத்திற்கேற்ப செலுத்தவேண்டிய ஏதேனும் ஒரு நிலுவைத் தொகை யோஅல்லது வட்டித்தொகையோ இருப்பின் அந்நிதியத்தின் அங்கத்துவத்தினைப் பெறும் தினத்தி லிருந்து அதனை செலுத்தி முடித்தல் வேண்டும். அவ்வாறே இத்திட்டத்தின் கீழ் இணையும் ஊழியர்களுக்காக குறித்த நியாயதிக்க சபையினால் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு வழங்கிய பங்களிப்பினை அவ்வூழியர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறிருந்தும் பணிக்கொடைச்சட்டத்தின் கீழ் உள்ள பணிக்கொடை யினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

*03.* ***<u>வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து ஓய்வூதியத்துடனான ஊழியர் ஒருவராகுதல்</u>***

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித்திணைக்களம் செயற்படுகின்ற தினத்திலிருந்து அதாவது (2014.01.03ம் திகதியிலிருந்து) ஓய்வூதியத்துடனான திணைக்கள மயமாக் கப்பட்ட ஊழியர் ஒருவராக இணைந்து கொள்ளவிரும்பும் உத்தியோகத்தர் ஒருவ ருக்கு அரசசேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக அந்த உத்தியோகத்தருக்கு அல்லது ஊழியர்களுக்கு திணைக்கள சேவையில் இணைந்து கொள்ள முடியும். திணைக்களத்தின் சேவையில் இணைந்த திகதியிலிருந்து அவ்வுத்தியோகத்தர் அல்லது ஊழியர் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரா கவோ அல்லது ஊழியர் ஒருவராகவோ கருதப்படும். அத்துடன் ஓய்வூதியத்தினைக் கணக்கிடும் பொருட்டான திகதியாக அவ்வுத்தியோகத்தர் அல்லது ஊழியர் சேவையில் இணைந்து கொண்ட திகதி கணக்கிடப்படும். (இந்த முறையின் கீழ் ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவர் புதிதாக கடமையில் இணைந்துகொள்கின்ற சந்தர்ப்பத்தில் அவ்வூழியர் சொந்தமான சேவைத்தொகுதியின் சம்பள அளவுத்திட்டத் தின் ஆரம்ப சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படுவர்.)

இத்திட்டத்தின் கீழ் கடமையில் இணையும் உத்தியோகத்தர் அல்லது ஊழியருக்கு 1958ம் ஆண்டின் 15ம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் சட்டத்தின் கீழ் பங்களிப்பினை வழங்கியுள்ள நிதியத்தினைப் பெற்றுக்கொள்ள தகுதி பெறுகின்றனர். அத்துடன் 1980ம் ஆண்டின் 46ம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப் புத்தொகையினைப் பெற்றுக்கொள்ள தகுதியினைப் பெறுகின்றனர். மேலும் பணிக்கொடைக் கொடுப்பனவு தொகையினைப் பெற்றுக்கொள்ளவும் உரித்துடை யோராவர்.

***04.*** ***<u>தொடர்ந்தும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறாத ஊழியர் ஒருவராகுதல்</u>***

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித்திணைக்களம் செயற்பட்டாலும் திணைக்கள பணிக் குச் செல்ல விரும்பாது தொடர்ந்தும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியங்களுக்கு தொடர்ச்சியாக பங்களிப்புச் செய்ய விரும்புகின்ற சந்தர்ப்பத்தில் அவ்வுத்தியோகத்தர் அல்லது ஊழியர் குறித்த தினத்திலிருந்து அமுல்படுத்தப் படுகின்றவாறு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத் திற்கு உட்பட்டதாக திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக கருதப் படுவதுடன் மேற்கூறிய நிதியங்களின் பொருட்டு தொடர்ச்சியான பங்களிப்புத் தொகை யினை செலுத்துதல் வேண்டும். எவ்வாறிருந்தும் அவ்வுத்தி யோகத்தர் அல்லது ஊழியர் ஓய்வூதிய அமைப்பு விதியின் கீழ் ஓய்வூதியத்தின் பொருட்டு உரித்துடைய வரல்ல.

***05.*** அதன் பிரகாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 04 பிரதிகளைக்கொண்ட விருப்பத் தினை தெரிவிக்கும் கூற்றில் சகல உத்தியோகத்தர்கள் மூலம் பூர்த்தி செய்து 2014 மே 16ம் திகதிக்கு முன்னர் தங்களுக்கு கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு வினயமுடன் அறியத்தருகின்றேன். இதனை ஒரு முக்கிய பணியாகக் கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மேலும் அறியத்தருகின்றேன்.

ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:

| | | |
|---|---|---|
| 01) | செயலாளர்,பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | - த.கூ.க.பொருட்டு |
| 02) | செயலாளர்,நிதி திட்டமிடல் அமைச்சு | - த.கூ.க.பொருட்டு |
| 03) | பணிப்பாளர் (மனிதவளங்கள்) | - உ.ந.பொருட்டு |
| 04) | கண்காய்வுத் தலைமையதிபதி | - அ.கொ.பொருட்டு |
| 05) | பிரதம கணக்காளர் | - அ.கொ.பொருட்டு |

இணைப்பு II

***2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்திற்கமைய தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிக்குழுவில் இணைவது தொடர்பான விருப்பத்தினைத் தெரிவிக்கும் கூற்று.***

**1ம் பகுதி – பின்னணித் தகவல்கள்**

1. முழுப் பெயர் :-

   …………………………………………………………………………………………

   …………………………………………………………………………………

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- …………………………………………………….

3. பிறந்த திகதி:-……… 2014.01.02ம் திகதியில் வயது ஆண்டு…… மாதம்….நாள்…

4. தேசிய அடையாள அட்டை இலக்கம்

5. சிவில் நிலை:- திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை

6. நீங்கள் ஒரு இலங்கைப்பிரஜையாயின் பிரஜவுரிமை கிடைத்தது எவ்வாறு என்பது தொடர்பில் பிறப்பின் மூலம்/பதிவின் மூலம்

7. கல்வி மற்றும் தொழிற் தகமைகள்

   7.1 க.பொ.த (சாதாரணம்)

   (i) சுட்டெண் ஆண்டு:

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

   1.1 க.பொ.த (உயர்தரம்)

   (ii) சுட்டெண் ஆண்டு:

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(iii) பல்கலைக் கழக பட்டம் ஒன்றினைப் பெற்றிருப்பின் அது தொடர்பான விபரம்.

அ) பட்டம் :-

ஆ) பாடநெறியின் காலவறையறை :-

இ) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-

ஈ) மொழி :-

7.2 தொழிற் தகமைகள்:-

I. தொழிற் தகமைகள் :-

II. பாடநெறியின் கால வறையறை

III. பெற்றுக் கொண்ட நிறுவனம் :-

IV. பெற்றுக் கொண்ட திகதி :-

8. பிரத்தியேக முகவரி :-

9. தற்போது கடமைபுரியும் இடத்தின் பெயர் :-

10. தற்போது கடமைபுரியும் இடத்தின் முகவரி :-

11. பதவி விபரம் :-

11.1 முதல் நியமனம்:-

I. முதல் நியமனம் கிடைக்கப் பெற்ற பதவியும் வகுப்பும்/தரமும்

II. பதவிக்குரிய சேவை (உரித்தாயின் மாத்திரம்)

III. அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி

IV. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

11.2 பிற பதவிகள் (பிற பதவிகளில் நியமிக்கப்பட்டதாயின் அவற்றின் சம்பள விபரம்)

I. நியமிக்கப்பட்ட பதவியும் வகுப்பும்/தரமும் :-

II. பதவிக்குரிய சேவை (உரித்தாயின் மாத்திரம்)

III. அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி

IV. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

11.3 இறுதியாகப் பெற்றுக் கொண்ட மாதாந்த சம்பளத்திட்டம் :-

**<u>II ம் பகுதி</u>**

**<u>2013ம் ஆண்டில் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 44(உ) பிரிவுக்கமைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிக்குழுவில் இணைவதற்கு/இணையாமல் இருப்பதற்கான விருப்பத்தினைத் தெரிவித்தல்.</u>**

……………………………………………………………………………………………… …………….. ஆகிய நான் ………………………………………………………………….................... …………. அதிகார சபையின் தரத்திற்கு/வகுப்க்குச் சொந்தமான ………………………… பதவியினை வகிப்பவர் என்ற வகையில் பதவியில் நிரந்தர நியமனத்தினை பெற்று*/ வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்படுகின்ற* ………………… ஆம் திகதியிலிருந்து அமுலிலுள்ளவாறு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிலையான ஓய்வூதியத்துடனான ………………………………………………… பதவியில் நியமிக்கப்படுவதற்கு*/ தொடர்ந்தும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினை செலுத்துவதன் அடிப்படையில் ………………….. ஆம் திகதியிலிருந்து அமுலிலுள்ளவாறு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் சேவையாற்றுவதற்கு */ வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் கடமையின் பொருட்டு உள்ளடங்காது அத்திணைக்களத்தில் அமுலிலுள்ள ……………..05ம் திகதியிலிருந்து நட்டஈட்டினைப் பெற்றுக் கொண்டு விலகுவதற்கு * …………………………..ஆம் இலக்கத்தினையும் …………… ஆம் திகதியிடப்பட்டதுமான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கையின் ………ஆம் இலக்க உப பந்தியின் பிரகாரம் எனது விருப்பத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விருப்பமானது பின்னர் வரும் தினம் ஒன்றில் மாற்ற முடியாது என்பதனையும் எனது விருப்பத்தினை நீக்க முடியாது என்பதனையும் நான் அறிவேன்.

……………….. ………………………………

திகதி உத்தியோகத்தரின் கையொப்பம்

<u>பிரிவின்/அலகின் தலைவரின் உறிதியுரை</u>

மேலே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் இந்த நிறுவனத்தில் பதவியொன்றினை வகிப்பவர் என்றும் அவர்*/அவள்*/ மேலுள்ள பிரகடனத்தை வாசித்து விளங்கிக் கொண்டு தேவையற்ற பகுதிகளை நீக்கி பிழையின்றி பூர்த்தி செய்து அதில் குறிப்பிடப்படுகின்ற விருப்பத்திற்கு எனது முன்நிலையில் கையொப்பமிட்டதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

……………….. ………………………………

திகதி பிரிவின்/அலகின் தலைவரது கையொப்பம்

<u>நிறுவனத்தலைவரின் உறுதியுரை</u>

மேலுள்ள தகவல்கள் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

……………….. ………………………………

திகதி நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

உத்தியோக இலச்சினை.

12. (i) (அ) ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்துவ இலக்கம் :-

(ஆ) அதில் இணைந்த திகதி

(ii) (அ) ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் இலக்கம் :-

(ஆ) அதில் இணைந்த திகதி :-

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானது எனவும் சரியானது எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

………………..                                        ………………………………

திகதி                                        விண்ணப்பதாரியின் கையொப்பம்

மேலுள்ள தகவல்கள் உதட்தியோகத்தரின் தனிநபர்க் கோவைக்கமைய பரீட்சிக்கப்பட்ட தனை உறுதிப்படுத்துகின்றேன்.

………………..                                        ………………………………
திகதி                                        நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோக இலச்சினை.